செ.வெ.எண்: 25 /ஜூன் நாள் : 12.06.2017

# இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 1000 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட தொகுப்புகளில் நீடித்த மானாவாரி சாகுபடிக்கான திட்டப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மானாவாரி சாகுபடியினை மேம்படுத்துவதற்கு தமிழக அரசு "நீடித்த மானாவாரி சாகுபடி இயக்கம்" என்ற திட்டத்தை 2016-17 முதல் 2019-20 வரை 4 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, நயினார்கோவில், முதுகுளத்தூர், கமுதி மற்றும் கடலாடி ஒன்றியங்களில் தலா 1000 ஹெக்டேர் பரப்பு கொண்ட 5 தொகுப்புகளில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இத்திட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நுழைவு கட்டப் பணிகள், கோடை உழவு, மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மானாவாரி நிலங்களில் நுழைவு கட்ட செயல்பாடுகளாக தேர்வு செய்யப்பட்ட மானாவாரி நிலத்தொகுப்பில் அதற்கான மேம்பாட்டுக்குழு மற்றும் விவசாயிகளின் ஆலோசனைகளின்படி, கிராம குளங்கள் போன்ற மழை நீர் சேமிப்பு கட்டமைப்புகள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அமைக்கப்படும். ஒவ்வொரு தொகுப்பிலும் ரூ.5.00 இலட்சம் மதிப்பிலான மழை நீர் சேமிப்பு கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

வறட்சி காரணமாக மேல் மண் இறுகியிருக்கும் நிலையில், ஐந்து கொத்து கொழுக்கலப்பை மூலம் உழவு செய்யப்பட்டு, கோடை மழையை அதிக அளவில் வயல்களில் தேக்கி மண்ணின் ஈரப்பதத்தை அதிகரித்து, நிலத்தின் உற்பத்தி திறனை அதிகரிக்க முடியும். மேலும் கோடை உழவின் மூலம் களைகளும், மண்ணில் உள்ள தீமை செய்யும் புழுக்களும், புழுக்களின் முட்டைகளும் பெருமளவில் அழிக்கப்படுகிறது. மானாவாரி தொகுப்பு நிலங்களில் உழவுப்பணி மேற்கொள்ள ஹெக்டேருக்கு பின்னேற்பு மானியமாக ரூ.1250/- வீதம் வழங்கப்பட உள்ளது.

தேர்வு செய்யப்பட்ட மானாவாரி நிலத்தொகுப்பில் உள்ள விவசாயிகள் சிட்டா, அல்லது நில ஆவணங்களுடன் விண்ணப்பத்தை உரிய படிவத்தில் உதவி செயற்பொறியாளர்கள் (வே.பொ) அவர்களிடம் அளிக்க வேண்டும். விவசாயி அவரது சொந்த செலவில் ஐந்து கொழுக்கலப்பை மூலம் இயந்திர உழவு மேற்கொள்ள வேண்டும். உழவுப் பணியினைத் துறையின் அலுவலர்கள் முன்னிலையில் மேற்கொண்டு பணியினை புகைப்படம் எடுத்தல் வேண்டும். உழவுப் பணி மேற்கொண்டதை உறுதி செய்து சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர்கள் அல்லது இளநிலைப் பொறியாளர்கள் சான்று வழங்குவர். உழவுப்பணி மேற்கொள்ளப்பட்டதை தொடர்புடைய விவசாயியும், துறையின் உதவி பொறியாளர் அல்லது இளநிலை பொறியாளர் ஒப்புதல் சான்றிட்ட படிவம் பட்டியல் கேட்பாக கருதப்படும். இதனை வேளாண்மை பொறியியல் துறை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் ஆய்வு செய்து உண்மைத்தன்மைக்கான சான்று வழங்கியபின் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்பு மேம்பாட்டு குழுக்களின் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு அவர்களது வங்கி கணக்கில் மானியம் பின்னேற்பாக செலுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் மானாவாரி நிலத்தொகுப்பு மேம்பாட்டு குழுக்கள் மூலம் விவசாயிகளை கலந்தாலோசித்து ஏதுவான இடங்களில் மழை நீர் சேமிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்பட உள்ளன. தேர்வு செய்யப்பட்ட தொகுப்புகளில் உள்ள மானாவாரி நிலங்களில் கசிவு நீர் குட்டைகள் மற்றும் கிராம குளங்கள் போன்ற மழை நீர் சேமிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்கண்ட கட்டமைப்புகளில் விவசாய நிலங்களிலிருந்து வழிந்தோடி வரும் மழை நீர் தாழ்வான பகுதியில் சேகரிக்கப்பட்டு, நிலத்தடி நீரை பெருக்கவும், மழைக்குறைவு காலங்களில் பயிர்களுக்கு உயிர்பாசனம் அளிக்கவும், கால்நடைகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும் முடியும். ஒவ்வொரு தொகுப்பிலும் ரூ.7.50 இலட்சம் மதிப்பில் மழை நீர் சேமிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்படவுள்ளது.

பண்ணை இயந்திரங்களின் உபயோகத்தை அதிகப்படுத்தும் விதமாக ஒவ்வொரு தொகுப்பிற்கும் தலா ஒரு வேளாண் கருவிகள் வாடகை மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.10.00 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க அனுமதிக்கப்படும். இதில் ரூ.8.00 இலட்சம் வரை அரசு மானியமாக வழங்கப்படும்.

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் வாடகை மையங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் குறைந்தது 8 விவசாயிகள் அடங்கிய விவசாய குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் போன்றவற்றின் மூலம் ஏற்படுத்தப்படும். மேற்படி குழுக்கள் அல்லது அமைப்புகள் தங்களின் சொந்த தேவைக்கு மட்டும் மேற்குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்தாமல், தேவைப்படும் மற்ற விவசாயிகளுக்கும் வாடகைக்கு வழங்க வேண்டும். இம்மையங்களில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு வாடகையின் அளவு சந்தை நிலவரத்திற்கு குறைவாக நிர்ணயிக்க வேண்டும்.

எனவே, நீடித்த மானாவாரி சாகுபடிக்கான திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மேற்படி பணியினை விவசாயிகள் நன்கு பயன்படுத்தி பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**